**அறிவிப்பு:** இந்த ஆவணம் ஆங்கிலம், இந்தோனேஷியா, வங்காள, பர்மிய, சீன மற்றும் தமிழ் மொழிகளில் கிடைக்கிறது. ஆங்கிலப் பதிப்புக்கும் அதன் பிற மொழிபெயர்ப்புகளுக்கும் இடையில் ஏதேனும் முரண்பாடு அல்லது மாறுபட்ட நிலை ஏற்பட்டால் ஆங்கிலப் பதிப்பே எப்போதும் மேம்படும்.

# தயாரிப்பு சுருக்கம்

**முக்கியமான குறிப்பு:** இந்தத் தயாரிப்புச் சுருக்கம் கவரேஜின் ஒர் அவுட்லைன் மட்டுமே. குறிப்பிட்ட விதிமுறைகள், நிபந்தனைகள், விதிகள், விலக்குகள் மற்றும் வரம்புகள் ஆகியவை பாலிசி வார்த்தைகளில் அமைக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழு பாலிசியின் கீழ் உள்ள நன்மைகள் கிரேட் ஈஸ்டர்ன் ஜெனரல் இன்சூரன்ஸ் லிமிடெட் ('GEG') மூலம் வழங்கப்படுகிறது. இந்தப் பிரீமியங்கள் Singtel Mobile Singapore Pte Ltd ('பாலிசியின் உரிமையாளர்') நிறுவனத்தால் செலுத்தப்படுகிறது மற்றும் அது பாலிசியின் உரிமையாளரால் பரிந்துரைக்கப்பட்ட தேர்ந்தெடுக்கப்பட்ட வாடிக்கையாளர்களுக்கு[1] ('காப்பீடு செய்யப்பட்ட நபர்') கட்டணமின்றி வழங்கப்படுகிறது.

இது Medisave -இன் அங்கீகரிக்கப்பட்ட பாலிசி அல்ல மற்றும் இந்த பாலிசியின் பிரீமியத் தொகையை செலுத்த நீங்கள் Medisave -ஐ பயன்படுத்த தேவையில்லை.

[1]GEG -க்கு பாலிசியின் உரிமையாளரால் அறிவிக்கப்பட்டவர் பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்படுவார் மற்றும் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதித் தேவைகளை அவர் பூர்த்தி செய்ய வேண்டும்.

| | |
|---|---|
| பொருளின் பெயர்: | **Singte பிரீபெய்ட் வாடிக்கையாளர்களுக்கு 30-நாள் இலவச காப்பீடு திட்டம்** |
| பாலிசி உரிமையாளர்: | **Singtel Mobile Singapore Pte Ltd** |

## தகுதி

பாதுகாப்பு இவர்களுக்கு மட்டுமே கிடைக்கும்:

- சிங்கப்பூர் குடிமகன், சிங்கப்பூர் நிரந்தரக் குடியுரிமை பெற்றவர் அல்லது தங்கி வேலை செய்வதற்கான அனுமதி, பணி அனுமதி, நீண்ட கால வருகை அனுமதி அல்லது மாணவர் அனுமதி போன்ற செல்லுபடியாகும் சிங்கப்பூர் அடையாள ஆவணத்தை வைத்திருக்கும் ஒரு நபர் மற்றும் பாலிசி காலத்தில் சிங்கப்பூரில் வசிப்பவர் மற்றும்
- **ஒரு Singtel பிரீபெய்ட் வாடிக்கையாளர்; மற்றும்**
- பாலிசி காலத்தின் தொடக்கத் தேதி அன்று வயது 16 முதல் 65 -க்குள் இருக்க வேண்டும்.

## பாலிசி காலம்

உங்களுக்கான பதிவு உறுதிப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ளபடி[2], **தொடக்கத் தேதியிலிருந்து** தொடர்ந்து 30 நாட்கள் வரை.

[2]உங்கள் பதிவு செய்யப்பட்ட மொபைல் எண்ணுக்கு அனுப்பப்பட்ட SMS மூலம், நீங்கள் இந்தப் பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்டுள்ளீர்கள் என்பதை நிரூபிக்கிறது, SMS -இல் பாலிசி காலம் மற்றும் தொடக்கத் தேதி விவரங்கள் உள்ளன.

**Great Eastern General Insurance Limited** (Reg. No. 1920 00003W)
(A wholly-owned subsidiary of Great Eastern Holdings Limited)
1 Pickering Street, #01-01 Great Eastern Centre, Singapore 048659
Tel +65 6248 2000 Fax +65 6532 2214 greateasterngeneral.com

<table>
<tr><th>காப்பீடு</th><th>காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு காப்பீடு செய்யப்பட்ட மூலதனத் தொகை*</th></tr>
<tr><td>

**1. விபத்தின் மூலம் உயிரிழப்பு / நிரந்தர உடல் இயலாமை**

விபத்து நடந்த நாளிலிருந்து 30 நாட்களுக்குள் உயிரிழப்பு அல்லது நிரந்தர உடல் இயலாமை ஏற்பட்டால் A, B அல்லது C காப்பீட்டுகளின் அடிப்படையில் கீழே உள்ள நன்மைகளின் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள அதிகபட்ச வரம்பை நாங்கள் வழங்குவோம்.

**நன்மைகளின் அட்டவணை**

<table>
<tr><th>காப்பீடு</th><th>காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு வழங்கப்படும் அதிகபட்ச தொகை</th></tr>
<tr><td>A. உயிரிழப்பு</td><td rowspan="3">S$10,000</td></tr>
<tr><td>B. நிரந்தர மொத்த இயலாமை</td></tr>
<tr><td>C. மற்ற நிரந்தர உடல் இயலாமை<br>1. ஒன்று அல்லது இரண்டு மூட்டுகள் மணிக்கட்டு அல்லது கணுக்கால் அல்லது அதற்கு மேலே மொத்த மற்றும் நிரந்தர இழப்பு; அல்லது<br>2. ஒன்று அல்லது இரண்டு கண்களின் மொத்த மற்றும் நிரந்தரமான பார்வை இழப்பு; அல்லது<br>3. ஒரு மூட்டு முழுமையாக மற்றும் நிரந்தர இழப்பு மற்றும் ஒரு கண்ணில் மொத்த பார்வை இழப்பு; அல்லது<br>4. பேச்சு மற்றும் இரண்டு காதுகளிலும் செவித்திறன் முழுமையான மற்றும் நிரந்தர இழப்பு</td></tr>
</table>

ஒன்றுக்கு மேற்பட்ட பலன்களை நாங்கள் வழங்குவதில்லை மற்றும் காப்பீடு செய்யப்பட்ட நபருக்கு வெற்றிகரமான உரிமைகோரலின் மூலம் கவரேஜ் நிறுத்தப்படும்.

</td><td>S$10,000</td></tr>
<tr><td>

**2. மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட பின் மீட்பு நன்மை**

காப்பீட்டு காலத்தில், காப்பீடு செய்யப்பட்ட நபர், விபத்து நடந்த நாளிலிருந்து 7 நாட்களுக்குள், விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் சிகிச்சைக்காக, குறைந்தபட்சம் 48 மணிநேரம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தால், S$100 ரொக்கப் பலனை வழங்குவோம்.

காப்பீட்டு காலத்தில், இந்த பலனின் அடிப்படையில் ஒரே ஒரு முறை தான் நாங்கள் பணம் வழங்குவோம்.

</td><td>S$100</td></tr>
<tr><td>

**3. வேலை இழப்பு அவசர நிதிகள்**

விபத்து அல்லது உடல்நலக்குறைவின் காரணமாக, காப்பீடு செய்யப்பட்ட நபர் குறைந்தபட்சம் 48 மணிநேரம் தொடர்ந்து உள்நோயாளியாக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அதன்பிறகு மருத்துவ தகுதி இழப்பின் காரணமாக அவரால் எந்த வகையிலும் வேலை செய்யத்

</td><td>S$1,000</td></tr>
</table>

| | |
|---|---|
| தகுதியற்றவராக இருந்து, குறைந்தபட்சம் 30 நாட்களுக்குத் தன்னிச்சையாக வேலை செய்ய இயலாமல் இருந்தால், நாங்கள் S$1,000 ரொக்கப் பலனை வழங்குவோம்.<br><br>காப்பீட்டு காலத்தில், இந்த பலனின் அடிப்படையில் ஒரே ஒரு முறை தான் நாங்கள் பணம் வழங்குவோம். | |

*எந்த நேரத்திலும் ஒரு காப்பீடு மட்டும்தான் (அதாவது ஒரே நபருக்கு காப்பீடு தொகை ஒன்றுடன் ஒன்று இல்லை)

## பிராந்திய வரம்புகள்

சிங்கப்பூரில் எங்கும் வேண்டுமானாலும்.

## முக்கிய விலக்குகள்

பின்வரும் காரணங்களால் அல்லது அதன் விளைவாக ஏற்படும் எந்தவொரு க்ளைம்க்கும் நாங்கள் பொறுப்பேற்க மாட்டோம்:

- போர், பயங்கரவாதம், அயனியாக்கும் கதிர்வீச்சு, அணு எரிபொருள் அல்லது கழிவுகளிலிருந்து கதிரியக்கத்தால் மாசுபடுதல், வேலைநிறுத்தங்கள், கலவரம், உள்நாட்டுக் கலவரம்
- வேண்டுமென்றே செயல்படுவது, தற்கொலை, சுய காயம், மன மற்றும் நரம்பு கோளாறுகள், தூக்கக் கோளாறு, மனச்சோர்வு, பைத்தியம் மற்றும் பதட்டம்
- ஏற்கனவே இருக்கும் மருத்துவ நிலைமைகள்
- கர்ப்பம், குழந்தை பிறப்பு, கருச்சிதைவு அல்லது ஏதேனும் சிக்கல்கள்
- பாலியல் நோய், HIV, AIDS மற்றும் அத்தகைய நோய்கள் எந்த வகையிலும்
- மது, போதைப்பொருள் அல்லது போதை மருந்துகள் மூலம் போதை
- வழக்கமான சுகாதார பரிசோதனைகள், பல் பராமரிப்பு அல்லது அறுவை சிகிச்சை, அழகுக்கான அல்லது பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை
- குளிர்கால விளையாட்டு, பெரிய வேட்டை விளையாட்டு, மலையேறுதல், பாறை ஏறுதல் (உட்புறம் பாறை ஏறுதல் தவிர), ஸ்கூபா/ஸ்கின் டைவிங், நீருக்கடியில் நடவடிக்கைகள், மோட்டார்-பேரணி அல்லது பந்தயம் அல்லது வேறு எந்த வகையான வேகப் போட்டிகளிலும் கால் சம்பந்தப்பட்ட போட்டிகள் தவிர பங்கேற்பது.
- விமானப் பணியாளர்கள் மற்றும் விமானப் பணியாளர் குழு, தொழில்முறை விளையாட்டு அணி
- வழக்கமான ஆயுதப் படைகள் மற்றும் துணைக் காவல் படை, இராணுவம் தவிர அல்லது அமைதிக்கால இயல்புடைய போலீஸ் சேவையும் தேசிய சேவைப் பணியாளர்கள் மற்றும் ரிசர்விஸ்ட் பயிற்சி உட்பட.
- மூன்றாம் தரப்பினரின் ஒப்பந்த உரிமைகள் சட்டம்
- அனுமதி வரம்பு மற்றும் விலக்கு
- தொற்று நோய்கள் விலக்கு
- சைபர் விலக்கு
- மொத்த அஸ்பெஸ்டாஸ்

## ரத்து செய்தல்

**குழு பாலிசியை ரத்து செய்தல்**

GEG அல்லது பாலிசிதாரர் இந்தக் குழு பாலிசியை முப்பது நாட்களுக்கு எழுத்துப்பூர்வமாக அறிவிப்பதன் மூலம் ரத்துச் செய்யலாம். GEG அல்லது பாலிசிதாரரால் இந்தக் குழுக் பாலிசியை ரத்து செய்தல், ரத்து செய்யப்பட்ட தேதிக்கு முன் எழும் எந்தவொரு க்ளைம்க்கும் பாரபட்சம் இல்லாமல் இருக்கும். பாலிசியை ரத்து செய்யும் தேதி, காப்பீடு செய்யப்பட்ட நபரின் காப்பீட்டுக் காலம் முடிவதற்குள் இருந்தால், அவர்களின் காப்பீடு, காப்பீட்டு காலாவதி தேதியில் தான் முடிவடையும்.

**காப்பீட்டை ரத்து செய்தல்**

பாலிசிதாரர் அல்லது காப்பீடு செய்யப்பட்ட நபர் GEG-க்கு எழுதுவதன் மூலம் இந்தப் பாலிசியின் கீழ் காப்பீடு செய்யப்பட்ட நபரின் காப்பீட்டை ரத்துச் செய்யலாம். GEG ரத்து செய்தல் அறிவிப்பை பாலிசிதாரர் அல்லது காப்பீடு

செய்யப்பட்ட நபரிடம் இருந்து எப்போது பெறுகிறது என்பதைப் பொறுத்து ரத்துச் செய்யப்படும் தேதி அமையும். பிரீமியம் திருப்பிக் கொடுக்கப்படாது.

## பாலிசியில் மாற்றங்கள்

பாலிசிதாரரின் உடன்படிக்கைப்படி GEG பாலிசியில் மாற்றங்களைச் செய்யலாம். காப்பீடு செய்யப்பட்ட நபரின் காப்பீட்டுக் காலத்தின் போது பாலிசியில் மாற்றம் செய்யப்பட்டால், அந்த மாற்றம் அவர்களின் தற்போதைய காப்பீட்டைப் பாதிக்காது.

## க்ளைம் நிபந்தனைகள்

**விபத்தைப் புகாரளித்தல்**

காப்பீடு செய்யப்பட்ட நபர் விபத்தின் முழு விவரங்களையும் விரைவாக GEG-க்கு வழங்க வேண்டும், மேலும் இந்தப் பாலிசியின் கீழ் க்ளைம்க்கு வழிவகுக்கும் எந்தவொரு நிகழ்வை பற்றியும் 30 நாட்களுக்குள் GEG-க்கு வழங்க வேண்டும். GEG-க்கு க்ளைம்யை நிராகரிப்பதற்கான உரிமை உள்ளது மற்றும் விபத்து நடந்த தேதியிலிருந்து 30 நாட்களுக்குப் பிறகு GEG-க்கு தெரிவிக்கப்பட்டால், GEG எந்தவொரு க்ளைம்யையும் செலுத்த பொறுப்பேற்காது.

**ஆவணங்களை வழங்குதல்**

காப்பீடு செய்யப்பட்ட நபர் அல்லது அவர்களின் சட்டப் பிரதிநிதி அனைத்துச் சான்றிதழ்கள், படிவங்கள், பில்கள், ரசீதுகள், தகவல்கள் மற்றும் ஆதாரங்களைத் தங்கள் சொந்த செலவில் GEG-க்கு வழங்க வேண்டும். GEG கேட்கும் க்ளைம்யை ஆதரிக்கும் எந்தவொரு பில்கள், ரசீதுகள் மற்றும் பிற ஆவணங்கள் அசல் நகல்களாக மட்டும்தான் இருக்க வேண்டும், இல்லையெனில் GEG எழுத்துப்பூர்வமாக ஒப்புக்கொள்ளும் வரை.

## புதுப்பித்தல் விதிமுறைகள்

இது குறுகிய காலத் தனிப்பட்ட நபர் விபத்துக் பாலிசியாகும் மற்றும் GEG இந்தக் பாலிசியைப் புதுப்பிக்கத் தேவையில்லை. GEG உங்களுக்கு எழுத்துப்பூர்வமாக 30 நாட்கள் அறிவிப்பு தருவதன் மூலம் இந்த பாலிசியை முடிக்கலாம். காப்பீடு செய்யப்பட்ட நபரின் காப்பீட்டிற்குப் புதுப்பித்தல் இல்லை.

**விலக்குகள் மீதான மறுப்புகள்:**

இந்தப் பாலிசியின் கீழ் பலன்கள் செலுத்தப்படாது என்பதற்குச் சில நிபந்தனைகள் உள்ளன. இவை ஒப்பந்தத்தில் விலக்குகளாகக் கூறப்பட்டுள்ளன. விலக்குகளின் முழுப் பட்டியலை தெரிந்துக்கொள்ளப் பாலிசி ஒப்பந்தத்தைப் படிக்குமாறு அறிவுறுத்தப்படுகிறீர்கள்.

**பாலிசி உரிமையாளர்களின் பாதுகாப்புத் திட்டம்**

இந்தப் பாலிசி உரிமையாளர்களின் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகிறது மற்றும் சிங்கப்பூர் வைப்புத்தொகை காப்பீட்டுக் கழகத்தால் (SDIC) நிர்வகிக்கப்படுகிறது. உங்கள் பாலிசிக்கான கவரேஜ் ஆட்டோமாடிக்காக உள்ளது மேலும் உங்களிடமிருந்து எந்த நடவடிக்கையும் தேவையில்லை. திட்டத்தின் கீழ் வழங்கப்படும் பலன்களின் வகைகள் மற்றும் கவரேஜ் வரம்புகள் பற்றிய மேலும் தகவலுக்கு, பொருந்தக்கூடிய இடங்களில், எங்களைத் தொடர்பு கொள்ளவும் அல்லது பொதுக் காப்பீட்டுச் சங்கம் (GIA) வருகை தாருங்கள் அல்லது SDIC இணையதளங்களை (www.gia.org.sg அல்லது www.sdic.org.sg) பார்வையிடுங்கள்.

22-ஜூலை-2022 -இல் புதுப்பிக்கப்பட்டது